1987 ஏப்ரல் 10]

கோத்தகிரி அணைக்கட்டில் மின்சார சப்-டிவிஷன்.

318—(*வினா எண் 11871) திரு. எம். சிவக்குமார் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோத்தகிரியில் அணைக்கட்டு பகுதியில் மின்சார சப்-டிவிஷன் எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோத்தகிரியில் ஒரு துணை மின்சார கோட்ட அலுவலகம் ஏற்கனவே இயங்கி வருவதால் இக் கேள்விக்கு இடமில்லை.

வட ஆற்காடு மாவட்டம் போளூர் கால்நடை மருந்தகம்.

319—(*வினா எண் 12513) திரு. ஜெ. ராஜாபாபு : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், போளூரில் உள்ள கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?;

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முத்துப்பேட்டையில், லக்கூனை சுற்றுலா மையமாக்கல்.

377—(*வினா எண் 10207) திரு. ச. ஞானசுந்தரம், திரு. எம். தங்கமணி மற்றும் திரு. எஸ். இரத்தினவேலு : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முத்துப்பேட்டை அருகில் கடலில் லக்கூன் என்ற இடத்தைச் சுற்றுலா மையம் ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?;

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?